Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

# ஈழமுரசு

முரசு 2 6-6-1985 வியாழக்கிழமை (வைகாசி 24 நம்மாள் 16) முழக்கம் 121

## எம். ஜி. ஆருக்கு ராஜீவ் காந்தி பேச்சுக்கள் பற்றி விபரித்தார்

இலங்கையின் இனப் பிரச்சினை தொடர்பாக ஜனாதிபதி ஜெயவர்த்தனவுடன் தாம் நடத்திய பேச்சுவார்த்தைகள் பற்றி பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி, தமிழக முதல்வர் எம் ஜி இராமச்சந்திரனுக்கு அறிவித்தார். நேற்று முன்தினம் புதுடில்லியிலிருந்து தொலைபேசி மூலம் தமிழக முதல்வருடன் தொடர்பு கொண்ட பிரதமர், தமது பேச்சுவார்த்தைகள் பற்றி விபரமாக எடுத்துக் கூறினார் சென்னையில் தங்கியிருக்கும் கூட்டணித் தலைவர்கள் மு. சிவசிதம்பரமும், அ. அமிர்தலிங்கமும், நேற்று பிற்பகல் முதல்வர் எம். ஜி இராமச்சந்திரனைச் சந்திக்கவிருந்ததாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

## ஜனாதிபதியின் மாவட்ட சபை அறிவிப்பு அதிருப்தி கவலையைத் தருகிறது என்கிறார் அமிர்தலிங்கம்

(சென்னை)

இலங்கையின் இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண மாவட்டசபைகள் அமைக்கப்படும் என்று ஜனாதிபதி ஜெயவர்த்தன தெரிவித்துள்ளது அதிருப்தியையும் கவலையையும் அளித்துள்ளது என்று தமிழர் விடுதலை கூட்டணி செயலதிபர் திரு அ அமிர்தலிங்கம் கருத்து வெளியிட்டுள்ளார்.

பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி இலங்கைத் தமிழர் பிரச்சினையில் கொண்டுள்ள கவலைக்கும், அவர் இது தொடர்பான பேச்சுவார்த்தைகளுக்காக பல மணி நேரத்தைச் செலவிட்டதற்காகவும் அவர் நன்றி தெரிவித்துள்ளார்.

சகல மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியல் தீர்வைக் காண்பதற்கு நல்ல தொரு சூழ்நிலை உருவாக்கப்படவேண்டுமென்று ஜனாதிபதி ஜெயவர்த்தனவும் பிரதமர் ராஜீவ் காந்தியும் கூட்டாகத் தெரிவித்திருப்பதை 'வரவேற்கத்தக்கது' என்றும் திரு: அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

இவ்விடயத்தில் பாரதம் மேலும் ஆக்கபூர்வமாக பங்கேற்கும் என்று தாம் நம்புவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

★ கூட்டம் கூட்டமாக வந்தவர்கள் தாக்கினராம்!

# மூதூரில் சுமார் 70 பேர் மரணம் 7 கிராம மக்கள் அகதிகளாகினர்!

## உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் தொண்டமான் வேண்டுதல்

(திருமலை)

மூதூரிலுள்ள தமிழ்க் கிராமங்களில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவங்களில் எழுபது பேருக்கும் அதிகமானோர் மரணமானதாகவும், ஏழு கிராமங்களைச் சேர்ந்த மக்கள் அகதிகளாக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் எஸ். தொண்டமான் நேற்று அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்ததுடன், இதனைத் தடுத்து நிறுத்த உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளார்,

இச் சம்பவங்களின் போது ஏறத்தாழ ஆயிரத்து ஐநூறு வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டதாகவும், சுமார் ஆறுயிரம் பேர் அகதிகளாகியுள்ளதாகவும் யு என். ஐ. செய்தியை மேற்கோள்காட்டி இந்திய வானொலி நேற்றிரவு அறிவித்தது.

பாரம்பரியமாக மூதூரில் தமிழர்கள் வாழும் கிராமங்களுக்கு கூட்டம் கூட்டமாக வந்தவர்கள் மூர்க்கத்தனமாக இந்தத் தாக்குதலை நடத்தியதாகவும், பெண்கள் குழந்தைகள் உட்பட எழுபதுக்கும் அதிகமானவர்கள் மரணமடைய நேர்ந்ததாகவும் தமக்குத் தகவல் கிடைத்ததாகவும் பாதுகாப்புக்குப் பொறுப்பான உயர் அதிகாரிகளுக்கு அமைச்சர் தொண்டமான் தெரிவித்

—4 ஆம் பக்கம் பார்க்க

## மீசாலை : மின்சாரம் தாக்கி ஒரு முழுக் குடும்பமே பலி!

மின்சாரம் தாக்கி ஒரே குடும்பத்தைச் சேர்ந்த கணவன், மனைவி, பிள்ளை ஆகிய மூவரும் பலியான பரிதாபச் சம்பவம் ஒன்று மீசாலையில் புதன்கிழமை அதிகாலையில் நிகழ்ந்துள்ளது.

வீதியில் அறுந்து கிடந்த சட்டவிரோத மின் கம்பியில் வீதியால் சென்று கொண்டிருந்த பெண்மணி சிக்குண்டு அவலக்குரல் எழுப்பியதாகவும் அவளைக் காப்பாற்ற முனைந்த குடும்பஸ்தர் ஒருவரும் அதில் சிக்குண்டதாகவும் கூறப்படுகின்றது. கணவனைக் காப்பாற்றச் சென்ற அவரது நிறைமாதக் கர்ப்பிணி மனைவி,

—4 ஆம் பக்கம் பார்க்க

## யுனிசெப் திட்டம் அங்கீகாரம்

யுனிசெப் உதவித் திட்டத்தின் கீழ் யாழ். மாநகரசபைப் பகுதியில் மேற்கொள்ளப்படவுள்ள நீர்விநியோகத் திட்டத்திற்கு யுனிசெப் நிறுவனத்தின் அங்கீகாரம் கிடைத்திருப்பதாக யாழ். மாநகர சபை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

## மந்திரி சபை முடிவு
## பயங்கரவாத தடுப்புக்கு மற்றொரு புதிய சட்டம்

வெளிநாடு ஒன்றுக்கு எதிராக பயங்கரவாதம் புரியவும், திட்டமிடவும் எடுக்கப்படும் நடவடிக்கைகளைத் தடுக்கும் சட்டமொன்றை தயாரிப்பது பற்றி மந்திரிசபை நேற்று ஆராய்ந்தது.

இந்திய அரசு அண்மையில் அறிமுகப்படுத்திய பயங்கரவாத தடுப்புச் சட்டத்தில் இவ்வாறான ஷரத்தை சேர்த்துக்கொள்ள சம்மதிக்குமானால் மட்டும் இந்தச் சட்டம் இங்கு அமுலுக்குக் கொண்டு வரப்படுமென மந்திரி சபைப் பேச்சாளர் கலாநிதி ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் தெரிவித்தார்

—4–ஆம் பக்கம் பார்க்க

## பொதுமக்கள் கஷ்டம் நீங்க இன்றுமுதல் மட்டுப்படுத்தப்பட்ட பஸ் சேவை!

வடபகுதி மக்கள் எதிர்நோக்கும் போக்குவரத்துக் கஷ்டங்களை மனதிற்கொண்டு இன்று முதல் மட்டுப்படுத்தப்பட்ட பஸ் சேவைகளை மீண்டும் நடத்துவதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்தும் இச் சேவை கிரமமாக நடைபெற சகலரும் ஒத்துழைப்பும் பாதுகாப்பும் வழங்க வேண்டும் என்று வட பிராந்திய போக்குவரத்துச் சபைத் தலைவர் திரு. எஸ். கனகரத்தினம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

எரிபொருளின்றி பஸ் சேவை ரத்தானதால் சகல துறை மக்களும் பட்ட கஷ்டங்களை நீக்க எடுத்த முயற்சியின் விளைவாக பல்துறை அதிகாரிகளும் வழங்கிய ஒத்துழைப்பினால் சிறு அளவிலான எரிபொருள் கிடைக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாகவும் தலைவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இன்று முதல் மீண்டும் பாடசாலை பஸ் சேவைகளும், தூர

—4 ஆம் பக்கம் பார்க்க

## இன்று : அத்தியாவசிய சேவை வாகனங்கள் நாளை : சகல தனியார் வாகனங்களுக்கும் பெற்ரோலும் டீசலும் வழங்கப்படும்

யாழ் மாவட்ட அத்தியாவசியத் தேவைகள் பாதிக்கப்படாமல் இருக்கும் பொருட்டு யாழ் மாவட்டத்தில் அத்தியாவசியச் சேவைகளில் ஈடுபட்டிருக்கும் வாகனங்களுக்கும், அலுவலர்களுக்கும், தனியாருக்கும் இன்று முதல் பங்கீட்டு அடிப்படையில் எரிபொருளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை யாழ். அரசாங்க அதிபர் திரு. எம் பஞ்சலிங்கம் மேற்கொண்டுள்ளார்.

இதன்படி இன்று வியாழக்கிழமை அத்தியாவசியச் சேவைகளில் ஈடுபட்டிருக்கும் வாகனங்களுக்கு ஒரு வாகனத்திற்கு இருபத்தைந்து (25) லீற்றர் எரிபொருள் என்ற அடிப்படையில் வழங்கப்படும் ஆஸ்பத்திரி சேவையில் ஈடுபட்டிருக்கும் அம்புலன்ஸ் வண்டிகள், கூட்டுறவுச் சங்க உணவுப் பொருட்களைக் கொண்டு

—4 ஆம் பக்கம் பார்க்க

## அமைச்சர் தொண்டமான் அறிவிப்பு
# பதவி துறக்க நான் தயார்!

(நுவரெலியா)

இவ் வருடம் டிசம்பர் 31ம் திகதிக்கு முன்னர் பிரஜாவுரிமை உட்பட மலையக மக்களின் பிரச்சினைகளுக்கு தன்னால் தீர்வுகாண முடியாவிட்டால், தனது தலைமைப் பதவியைத் தாம் துறக்க முடிவு செய்துள்ளதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான எஸ். தொண்டமான் தெரிவித்தார்.

இ. தொ. காவின் மூன்று நாள் அமைதிப் பிரார்த்தனை இறுதியில் அவர் பேசுகையில், குறிப்பிட்ட தினத்திற்கு முன்னர் இதனை நிறைவேற்றாவிடின் தமது தலைமைத்துவத்திலும், தமது கட்சியின் கொள்கையிலும் ஏதோ தவறு இருப்

—4 ஆம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதி ஷியா பங்களாதேஷில்

(டாக்கா)

சூறாவளியினால் பாதிக்கப்பட்ட பங்களாதேஷிற்கு பாகிஸ்தான் ஜனாதிபதி ஷியா உல்ஹக் நேற்று விஜயம் செய்தார். அவர் அங்கு பாதிக்கப்பட்ட இடங்களை பங்களாதேஷ் ஜனாதிபதி எர்சாத்துடன் சென்று பார்வையிட்டார்.

# ஹாட்லி மாணவரின் கல்வி தடையின்றி தொடர்கிறது

(புலோலி)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் சகல வகுப்புகளும் புற்றளை மகா வித்தியாலயத்தின் ஒரு பகுதியிலும், அருகிலுள்ள தனியார் மண்டபங்களிலும் ஒழுங்காக நடைபெறுவதாகவும் க.பொ.த. (உயர் தர) வகுப்பு மாணவர்களுக்கான செயல்முறை வகுப்புகள் பருத்தித்துறை வேலாயுதம் ஆண்கள் மகா வித்தியாலய ஆய்வுகூடத்தில் நடைபெறுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அதிபர் திரு. டபிள்யூ. என். எஸ். சாமுவேல் அறிவித்துள்ளார்.

அதிபர் திரு. சாமுவேலின் அறிவித்தலில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;- ஹாட்லிக் கல்லூரியின் 6ம் வகுப்பு தொடக்கம் 10ம் வகுப்பு வரையான ஒவ்வொரு வகுப்பிலுமுள்ள நான்கு பிரிவுகளும் புற்றளை மகா வித்தியாலயத்தில் ஒழுங்காக நடைபெறுகின்றன. ஒவ்வொரு பிரிவிலும் குறைந்தது 35 மாணவர்கள் ஒழுங்காக வகுப்புகளுக்குச் சமுகமளிக்கின்றனர்.

புற்றளை மகா வித்தியாலயத்தின் ஒரு பகுதியிலும் அருகிலுள்ள தனியார் மண்டபங்களிலும் வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன.

க. பொ. த. (உயர் தர) வகுப்பு மாணவர்கள் தமது செயல்முறை வகுப்புக்களை வேலாயுதம் ஆண்கள் மகா வித்தியாலய ஆய்வுகூடத்தில் மேற்கொள்வதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## வரி விளம்பரம்


### விற்பனைக்கு

சாவகச்சேரி கற்குழி நல்லதண்ணீர்க் கிணற்றடியில் வீடுகட்ட உகந்த 1½ பரப்புக்காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு; அம்பாள் பார்மஸி சாவகச்சேரி.

### விற்பனைக்கு

பல நிறங்களில் அழகான Love Birds கூட்டுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: இல. 887, ஆஸ்பத்திரி வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.


### தவறிவிட்டது

V. T. நீதிராசா என்பவருடைய A/L கல்விச்சான்றிதழுடன், சில ஆவணங்களும் கல்வயல்-சாவகச்சேரி பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தோர் தயவு செய்து பரம்ஸ் கடையில் ஒப்படைக்குமாறு வேண்டுகின்றேன்.

சங்குவேலி வடக்கு பூபாலசிங்கம் பொன்மணி ஆகிய எனது அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுப்போர் தயவுசெய்து மேற்குறிப்பிட்ட விலாசத்திலோ ஈழமுரசு காரியாலயத்திலோ ஒப்படைக்கவும்.

# உடுப்பிட்டி வட்டார கல்வி மாநாடு

(உடுப்பிட்டி)

கல்வி அமைச்சின் புதிய திட்டத்தின்படியான - 'பாடசாலை மீளமைப்பு' பற்றி உடுப்பிட்டி வட்டாரத்திலுள்ள கல்வி மான்களையும் பாடசாலை அபிவிருத்திச் சபைப் பிரதிநிதிகளையும் யாழ். கல்விப் பணிப்பாளர் திரு: எம். சிமியாம்பிள்ளை இன்று வியாழக்கிழமை சந்திக்கவிருக்கிறார்.

உடுப்பிட்டி வட்டாரக் கல்வி அதிகாரி திரு. வி. கே. ஈசுரபாதம் தலைமையில் நெல்லியடி இராசலிங்கம் மண்டபத்தில் நடைபெறும் இக்கூட்டத்தில் கல்வி அதிகாரி திரு. க. கந்தசாமியும் கலந்து கொள்வரர்.

## கும்பாபிஷேகம்

(சங்கானை)

சங்கானை — மாலியவத்தை குடுபனை ஞானவைரவர் ஆலய நூதன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் இன்று வியாழக்கிழமை அதிகாலை நடைபெறும்.

# இணைப்பதிகாரியைச் சந்தித்து

# பூநகரி மக்கள் பிரச்சினை விரிவாக ஆராயப்பட்டது

(சுண்டுக்குளி)

பூநகரிப் பகுதி மக்களின் பாதுகாப்பு, எரிபொருள் தட்டுப்பாடு, போக்குவரத்துக் கஷ்டம் ஆகியன பற்றி ஆராயும் பொருட்டும் பூநகரிப் பிரஜைகள் குழுத் தலைவர் திரு. வி. பரமநாதன் தலைமையில் பிரஜைகள் குழு ஆனையிறவு இராணுவ முகாமில் கிளிநொச்சி மாவட்ட இணைப்பதிகாரி கேர்ணல் திரு. திலகரத்தினவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தையை மேற்கொண்டது.

இத்தூதுக்குழுவில் குழுச் செயலாளரும், பூநகரி தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கப்பொது முகாமையாளருமான திரு. ஏ. வீ. கே. மாணிக்கம், தொழிலதிபர் திரு: எஸ். சண்முகசாமி ஆகியோர் அங்கம் வகித்தனர்.

இப் பேச்சுவார்த்தையின் போது பூநகரிப் பகுதி மக்களில் பெரும்பாலோர் விவசாயிகள் என்றும், பூநகரி மின்சார வசதியில்லாத பகுதியானபடியாலும் எரிபொருள் தட்டுப்பாட்டினால் மக்கள் அடைந்து வரும் கஷ்டங்கள் பற்றியும் இணைப்பதிகாரியிடம் சுட்டிக் காட்டப்பட்டது.

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் நிர்வாகத்தின் கீழியங்கும் எரிபொருள் விநியோக நிலையம் பாதுகாப்பின்மை காரணமாக எரிபொருளைக் கொண்டு வரமுடியாமல் இருப்பதால் ஏழை விவசாயிகள் அதிக விலைக்கும் கூட எரிபொருளைப் பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளதென்றும் இணைப்பதிகாரியிடம் தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து மண்ணெண்ணெய், டீசல் ஆகியவற்றைப் பிரஜைகள் குழுவின் பாதுகாப்பில் வழங்க அனுமதி அளிப்பதாகவும், இதற்கும் இடைஞ்சல் ஏற்படும் பட்சத்தில் மீண்டும் ஒருபோதும் அனுமதி வழங்க முடியாது என்றும் இணைப்பதிகாரி அறிவித்தார்.

பூநகரி மக்களின் பாதுகாப்பு கல்லூரி மாணவர்களின் பாதுகாப்பு, போக்குவரத்துக் கஷ்டங்கள் பற்றியும் விரிவாக ஆராயப்பட்டது. பூநகரி முகாம் பொறுப்பதிகாரியும் இதனை உறுதிப்படுத்தியதுடன் கல்லூரி அதிபர், ஆசிரியர்களுடனும், பிரஜைகள் குழுத் தலைவருடன் சேர்ந்து சந்தித்துப் பாதுகாப்பு வழங்குவதாக உறுதியளிக்கப்பட்டது.

சங்குப்பிட்டி, கேரதீவுப் பாதைச் சேவைபற்றியும், அதன் அத்தியாவசிய சேவை பற்றியும் பிரஸ்தாபிக்கப்பட்ட போது பாதுகாப்புக் காரணங்களுக்காக இதை நடைமுறைப் படுத்துவதில் சில சிக்கல்கள் இருப்பதாகத் தெரிவிக்கப் பட்டது.






※ குருநகர் சென் ஜேம்ஸ் கிழக்கு வீதி எடிசன் எம்டோனு தம்பதிகளின் மகன் உமேஷன் விஜேதராஜ் இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

※ சங்கானை சுந்தரலிங்கம் பத்மாதேவி தம்பதிகளின் மகன் சுசீபன் இன்று தனது ஆறாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

※ பாஷையூர், தேவதாஸ் தவபுஸ்பம் தம்பதிகளின் மகள் தனேந்திரா இன்று தனது எட்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

※ தொல்புரம் வடக்கு கண்ணன் வித்தியா தம்பதிகளின் மகள் ரோஹினி இன்று தனது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

※ பண்டத்தரிப்பு ரகுநாதன் தேவி தம்பதிகளின் மகன் ஆசோக் இன்று தனது நாலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

※ சாவகச்சேரி சிவநாதன் கமலேஸ்வரி தம்பதிகளின் மகள் சிவமீரா இன்று தனது ஏழாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

※ சுன்னாகம் வடக்கு ராஜா பேபி தம்பதிகளின மகன் சுரோஷன் இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

※ பிரான்சில் இருக்கும் கிறிஸ்ரியன் மதுரநாயகம் மேரி யசிந்தா தம்பதிகளின் மகள் லிளித் பியூமிக்கா தனது ஏழாவது பிறந்த நாளை இன்று கொண்டாடுகிறார்.

※ ஈச்சமோட்டை சொக்கலிங்கம் தம்பதிகளின் மகள் சியாமளா (லக்கி) இன்று தனது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

※ பூநகரி செட்டியகுறிச்சி சிவராசா ஜெயமங்களம் தம்பதிகளின் புதல்வன் சிவகரன் தனது இரண்டாவது பிறந்த நாளை இன்று கொண்டாடுகிறார்.

## பிறந்தநாள் வாழ்த்து



செல்வி மதுமிதா

ஒட்டுமடம் தேவாலய வீதியைச் சேர்ந்த சரவணபவான் பிறேமா தம்பதிகளின் செல்வப்புதல்வி மதுமிதா இன்று தனது இரண்டாவது பிறந்த தினத்தை குதூகலமாகக் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, ஐயா, அம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், மாமிமார், சித்தப்பாமார், சித்திமார், அக்காமார், அண்ணன்மார், மச்சான்மார், மச்சாள்மார்சிரும் சிறப்புமாய் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

# முன்னர் 6 ரூபா; இன்று 10 ரூபா

(புங்குடுதீவு)

புங்குடுதீவில் மினிபஸ் கட்டணம் மீண்டும் அதிகரித்துள்ளது. புங்குடுதீவிலிருந்து யாழ் நகர் வருவதற்கு முன்னர் ஆறு ரூபா அறவிடப்பட்டது. தற்போது பத்துரூபா மினிபஸ் கட்டணமாக அறவிடப்படுகிறது. டீசல், பெற்றோல், மண்ணெண்ணெய் ஆகிய எரிபொருள்களுக்கு இப்பகுதியில் நிலவும் தட்டுப்பாட்டினால் பொதுமக்கள் பெரும் அவதியுறுகின்றனர்.

டீசல் பற்றாக்குறையினால் மினிபஸ் சேவைகள் இங்கு பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

# மாநகரசபை மேலும் பாதிப்பு

யாழ். மாநகரசபையின் சிறும்பியடி அலுவலகத்தில் இடம்பெற்ற ட்ரான்ஸ்மீற்றர் கொள்ளையால் யாழ் மாநகர சபையின் அலுவல்களும், பொதுமக்களின் வசதிகளும் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளதாக சபையின் ஆணையாளர் திரு. சீ வீ கே. சிவஞானம் கவலை தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே மிகவும் நொந்து போயுள்ள மாநகரசபையை மேலும் பாதிப்படையச் செய்வதாகவே இந்நடவடிக்கை உள்ளது எனவும் அவர் கூறினார்.


## வியாபாரம்பெருக விளம்பரம் செய்க

பெற்று எசன்ஸ் சப்ளையேர்ஸ்
PETTAH ESSENCE SUPPLIERS

பேக்கரி தயாரிப்புகள்,
பிஸ்கட், ரொபி, இனிப்பு, குளிர்பானம்,
ஐஸ்கிறீம், சிற்றுண்டி வகைகளுக்கான சகலவிதமான
எசன்ஸ், கலர்ப்பவுடர், கேக் தயாரிப்புக்குத் தேவையான
சகல பொருட்களுக்கும்

- ஊதுபத்தி
- சாம்பிராணி
- விளைவு சூடம்
- ரல்கம் பவுடர்
- வெள்ளை மஞ்சள் வசலின்
- வாசனைத்திரவிய எண்ணெய்
- ஓடிக்கொலோன்

ஆகியவை தயாரிப்பதற்கான உற்பத்திப் பொருட்களும்
ஏனைய இதர

- பேப்பர் வகை
- பொக்ஸ்போட்
- காட்போட்
- ஆற்போட்
- நியூஸ்பேப்பர்
- ஒயில் பேப்பர்
- பிறவுண் பேப்பர்
- ரிசு பேப்பர்
- சலப்பின்

மற்றும் எல்லா பொலித்தீன் வகைகளுக்கும்
அச்சகங்கட்குத் தேவையான
சகல மை வகைகளுக்கும்
எம்மால் புதிதாக ஆரம்பிக்கப்பெற்ற ஸ்தாபனத்திற்கு
இன்றே விஜயம் செய்யுங்கள்.

223, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்

223, Power House Road, Jaffna.

உதய சிந்தனே

எதிரியைக் கொல்லக்கூடிய வலிமை தற்காப்பிற்குத் தேவையல்ல, அஞ்சாது உயிர் துறப்பதற்குரிய வலிமையே ஒருவனுக்கு வேண்டும்.
-- மகாத்மா காந்தி

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம்: தொலேபேசி: 23336

## இதய ஒலி

6-6-1985 வியாழக்கிழமை (குரோதன வைகாசி 24)

# திட்டமிட்டு நடக்கிறது; கவனிப்பது அவசியம்

டீசல் தட்டுப்பாட்டிஞல் குடாநாட்டு போக்குவரத்துகள் எவ்வளவு தூரத்திற்குப் பாதிக்கப்பட்டுள்ளன என்பது பற்றி நேற்று முன்தினம் இங்கு குறிப்பிட்டோம்.

பாதுகாப்பின்மையால் வடபகுதி பஸ் சேவையை வெளி மாவட்டங்களுக்கு மேற்கொள்ள முடியாது உருவாகிவரும் துர்ப்பாக்கிய நிலே பற்றி இன்று குறிபபிட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

எரிபொருள் தட்டுப்பாடு வடக்கில் பட்டினிப் போராட்டமொன்றை நடத்திவருவது பற்றியும், பசிக் கொடுமையிஞல் பல சாவுகள் ஏற்படுத்தப்போகும் அபாயம் பற்றியும் பருத்தித்துறை பிரஜைகள் குழுத் தலேவர் பேராசிரியர் கணேசலிங்கம் ஜஞதிபதி அவர்களு கு அனுப்பிய அவசரத் தந்தியொன்றில் சுருக்கமாக விபரித்திருந்தார்.

உள்ளூர் சேவைகளுக்கு எரிபொருள் இல்லாதபோதிலும், வெளியூர் போக்குவரத்துச் சேவைகள் ஓரளவுக்குத் தங்கு தடையின்றி நடைபெற்று வந்ததால், நிலேமை மோசமடையாதிருந்தது.

கொழும்பிலிருந்து உணவுப் பொருட்களுடன் வந்த லொறிகளும், கொழுமபிற்கு வடபகுதி உற்பத்திப் பொருட்களுடன் சென்ற லொறிகளும வழியினில் எரித்துச் சாம்பராக்கப்பட்டன.

லொறிச் சாரதிகளும், ஊழியர்களும் கொல்லப்பட்டுள்ளனர்; படுகாயப்படுத்தப்பட்டுள்ளனர்.

இதஞல் அத்தியாவசிய பொருட்களே கொழும்பிலிருந்து ஏற்றிவர எந்த லொறிச் சொந்தக்காரரும் தயங்கவே செய்வர்.

இவை ஒரு புறமிருக்க, யாழ்ப்பாணத்திற்கும் கொழும்பிற்குமிடையிலான புகையிரத சேவைகள் துண்டிக்கப்பட்டு எத்தனேயோ மாதங்களாகிவிட்டன.

யாழ்ப்பாணப் பகுதிக்கான ரயில் தண்டவாளங்கள் 'கறள்' பிடிக்கும் நிலேக்கு வந்துவிட்டன.

இதஞல் தனியார் பஸ்களே இரு பகுதிகளுக்குமிடையே தினசரி சேவையில் ஈடுபட வேண்டியிருந்தது தவிர்கக முடியாததாகியிருந்தது.

பல நூற்றுக் கணக்கான அவசர தேவைக்குட்பட்டோர் தனியார் பஸகளேயே நம்பியிருந்தனர்.

சிலாபம், அனுராதபுரம் சம்பவங்கள் போன்றவற்ருல் இரவு சேவைகள் ரததாகி கொழும்பிற்கும் யாழ்ப்பாணத்திற்குமிடையே பகல் சேவை மட்டுமே நடத்தப்பட்டு வந்தது.

ஆஞல் இப்போது அடுத்தடுத்து நடந்த சம்பவங்களால் யாழ்ப்பாணம் – கொழும்பு பஸ் சேவைகளும் ஸ்தம்பிக்கும் நிலே உருவாகியுள்ளது.

வழி வழியே கல்வீச்சுகள் தாராளமாக இடம்பெற்றன. பஸ்களின் கண்ணுடிகள் மட்டுமன்றி, பிரயாணிகளின் தலேகளேயும் இவை கூர்மையாகப் பதம் பார்த்தன.

இடைக்கிடையே பிரயாணிகள் இம்சிக்கப்பட்டு, துன்புறுத்தப்பட்டு, அவர்களது உடைமைகள், பணம், நகை ஆகியவை கொள்ளேயடிக்கப்பட்டன.

கற்பழிப்புச் சம்பவங்கள் கூட தாராளமாக இடம்பெற்றன.

சில வாரங்களுக்கு முன்னர் சிலாபம் பாதையில் வந்த யாழ்ப்பாண பஸ்ஸுக்கு நடந்ததை இலகுவில் மறந்துவிட முடியாது.

கடந்த சில நாட்களாக மிஹிந்தலே, கெக்கிராவை, தம்புள்ள, குருநாகலே ஆகிய இடங்களில் பஸ்கள் மறிக்கப்பட்டு, பிரயாணிகள் தாக்கப்பட்டு, கடுமையாக எச்சரிக்கை செய்யப்பட்டு அனுப்பப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் றம்பாவையில் நடைபெற்ற சம்பவத்திஞல் யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற சகல பஸ்களுமே திரும்பிவரவேண்டியேற்பட்டது.

''சகல வன்செயல்களும் நிறுத்தப்பட வேண்டும்'' என்ற, தலேவர்களின் வேண்டுகோள் இவர்களுக்குக் கேட்கவில்லேயா?

''பொறுமையாக இருங்கள்'' என்ற ஜஞதிபதியின் வேண்டுகோள் இவர்களுக்குக் கேட்கவில்லேயா?

பஸ் தாக்குதல் படுகொலேகள், கடந்த வருடம் செப்டம்பர் மாதத்து போயாவிற்கு அடுத்த நாள், வவுனியாவில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இன்றுவரை குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்படாததால், சுலபமான ஒரு தாக்குதலாக இது அமைந்துவிட்டது போலும்.

கடந்த திங்கட்கிழமை, இம்மாத போயாவிற்கு அடுத்த நாள், திருமலேயிலிருந்து வந்த பஸ் பன்குளத்திற்கு அருகில் வழிமறிக்கப்பட்டு 13 பிரயாணிகள் படுகொலே செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாருன செயல்களால் வெளியிடங்களுடஞன போக்குவரத்துத் தொடர்புகளே திட்டமிட்டுத் துண்டிப்பதன் மூலம், வடபகுதியை நாட்டின் மற்றைய பகுதிகளிலிருந்து பிரித்துவிட ஒரு கோஷ்டி முனேகிறதா?

இது உண்மையாஞல், பின்னர் தமிழ் மக்களே பிழை சொல்வது அர்த்தமற்றதாகிவிடும்.

## லண்டனில் பிரதமர் ஷியாங் சொன்ஞர்:

# சீன - பிரிட்டன் நட்புறவில் புது அத்தியாயம் மலர்கிறது!

(லண்டன்)

சீஞவுக்குப் பிரிட்டனுடஞன உறவில் புதிய அத்தியாயம் ஒன்று ஆரம்பமாகிறது என்று சீனப் பிரதம மந்திரி திரு ஷியோ ஷியாங் கூறியுள்ளார். பிரிட்டனுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள அவர் பிரிட்டிஷ் பிரதம மந்திரி திருமதி மார்கிரெட் தட்சருடன் நடத்திய சந்திப்பின் பின் அவர் இக் கருத்தைத் தெரிவித்தார். இச்சந்திப்பு இரண்டரை மணித்தியாலங்கள் நீடித்தது என்று லண்டன் அறிக்கைகள் நேற்றுத் தெரிவித்தன. இரு பிரதம மந்திரிகளும் ஆக்கபூர்வமான விடயங்களுக்கு அணு சக்தியைப் பாவித்தல், பொருளாதார ஒத்துழைப்பு ஆகிய இரு விடயங்கள் சம்பந்தமாகவும் இரு உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டனர்.

சீனப் பிரதம மந்திரி திரு. ஷியாங் பிரிட்டனில் தங்கியிருக்கையில் ஹொங்கொங்கை முறைப்படி கையேற்பது தொடர்பான விடயம் குறித்தும் ஆராய்வார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பொருளாதார ரீதியில் சீஞ தனது மிகுந்த ஒத்துழைப்பை பிரிட்டனுக்கு வழங்கத் தயாராக இருக்கிறது என்று அவர் பிரிட்டிஷ் பிரதம மந்திரியிடம் உறுதியளித்தார்.

அவர் தனது பிரிட்டன் பயணத்தை முடித்துக்கொண்டபின்னர் மேற்கு ஜெர்மன், நெதர்லாந்து ஆகிய நாடுகளுக்கும விஜயம் செய்வார்.

## ராஜீவ் தாயகம் திரும்புகையில்

# ஜெனீவாவில் தொழிலாளர் மாநாட்டிலும் பேசுவார்!

(ஜெனீவா)

நான்கு நாடுகளுக்கான உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள பாரதப் பிரதம மந்திரி திரு ராஜீவ் காந்தி தனது பயண முடிவில் ஜெனீவா ஊடாகத் தாயகம் திரும்பவுள்ளார்.

ஜெனீவாவில் அவர் சர்வதேசத் தொழிலாளர் நலஸ்தாபனத்தின் எழுபத்தோராவது வருடாந்த மாநாட்டில் சிறப்புரையாற்றவுள்ளார்.

அவர் பாரிஸிலும் வாஷிங்டனிலும் பாரத விழாக்களேத் துவக்கி வைக்கவுமுள்ளார்.

அவர் தனது முதல் விஜயத்தை எகிப்திற்கு ஆரம்பித்துள்ளார். ஜஞதிபதி முபாரக்குடன் அவர் இருதரப்பு உறவு மற்றும் சர்வதேச நிலேகுறித்து விரிவாக ஆராய்வார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## பைலட்டின் சாதுர்யம்

(புதுடில்லி)

மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. காட கிலும், மத்தியப் பிரதேஷ் முதலமைச்சர் திரு. ஓரா வும் போபாலில் நடைபெற்ற திரைப்படவிழா ஒன்றில் கலந்து கொள்ள விமானம் ஒன்றில் சென்று கொண்டிருந்தபோது அவ்விமானத்தில் உண்டான இயந்திரக் கோளாருல் கோர விமான விபத்திலிருந்தும் தெய்வாதீனமாக உயிர் தப்பினர். தக்க தருணத்தில் பைலட் விமானத்தைப் புதுடில்லி விமான நிலயத்துக்கே சாமர்த்தியமாகத் திருப்பிக் கொண்டுவந்து தரையிறக்கிவிட்டார்.

## ஈழத்தமிழர் இடர் களேய தமிழகமாதரும் சிறைவாசம்

(மதுரை)

இலங்கை இனப்பிரச்சினேயில் மத்திய அரசு போதுமான கவனம் செலுத்தவில்லே என்று கூறி மதுரையில் உள்ள மத்திய அரசு அலுவலகங்கள் முன் மறியல் செய்யமுற்பட்ட வேளே கைதாகிச் சிறை வைக்கப்பட்ட இரண்டாயிரத்து இருநூற்றுத் தொண்ணூற்று நான்கு திராவிட முன்னேற்றக் கழகத்தொண்டர்கள் விடுதலே செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் பதினேந்து நாட்கள் காவலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இவர்களில் பதினேழு பேர் பெண்களாவர்.

## சந்திப்பு

(புதுடில்லி)

ஜெர்மன் சமஷ்டிக் குடியரசின் செய்திஸ்தாபன இயக்குநர் நாயகம் புதுடில்லியில் மத்திய தகவல், ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. காட்கிலேச் சந்தித்து உரையாடிஞர்.

## அஸாமில் வெள்ளம் பொருளகற்ற யானேகள் உதவி!

(கொஹாட்டி)

அஸாமில் பயங்கர வெள்ளம் ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. இதஞல் ஏராளமான குடும்பங்கள் இடம் பெயர்ந்து விட்டதாகவும் நிலச்சரிவிஞல் ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டு உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பாரிய பொருட்களேக் காப்பாற்றிக்கொள்ள யானேகள் பயன்படுத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## பாகிஸ்தான் போக்கிஞல் பாரதமும் உஷாராகிறது?

(புதுடில்லி)

அணு ஆயுத உற்பத்தியில் ஈடுபடுவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து பாரதம் ஆலோசித்து வருவதாகப் பாரதப் பிரதம மந்திரி திரு. ராஜீவ் காந்தி தெரிவித்துள்ளார்.

பிரான்ஸ் பத்திரிகை ஒன்றிற்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே அவர் இதனேத் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் அணுசக்தி நாடாக மாற முயற்சி மேற்கொள்வதால் பாரதம் இவ்விடயத்தில் அசமந்தப் போக்குடன் நடந்து கொள்ள முடியாது என்று அவர் இப்பேட்டியில் கூறியுள்ளார்.

## கான்பராவில் அமைச்சர் அறிக்கை

# அவுஸ்திரேலிய பொருளியல் வளம் வளர்ந்து வருகிறது!

(கான்பரா)

அவுஸ்திரேலியாவின் பொருளாதாரம் வளர்ந்து வருவதால் பல தொழிலாளர்களேப் பெற்றுக்கொடுப்பதற்காக அந்நாட்டின் குடிவரவை ஊக்குவிக்க அவுஸ்திரேலிய அரசு தீர்மானித்துள்ளது.

இத்தகவலே அவுஸ்திரேலிய குடிவரவு அமைச்சர் திரு. கிறிஸ்ரோபர் கான்பராவில் விடுத்த அறிக்கை ஒன்றில் வெளியிட்டுள்ளார்.

இந்த வருடம் இருபதாயிரம் பேருக்கு மேல் நிரந்தர வதிவிடம் அளிக்க அவுஸ்திரேலிய அரசு முடிவு செய்துள்ளதாகவும் அவர்களுக்கு ஜூலே மாதம் முதலாம் திகதி முதல் இவ்வசதி இடம் அளிக்கப்படுவதாகவும் அவர் கூறிஞர்.

அவுஸ்திரேலியாவில வர்த்தகர்கள் மற்றும் தேர்ச்சி பெற்ற ஊழியர்களுக்கு இவ்வாறு இடம் அளிக்கப்படும் எனவும் இந்த நடவடிக்கையால் சில தொழில்துறைகளில் ஏற்பட்டுள்ள தொழிலாளர் பற்ருக்குறை நீங்கும் எனவும் அவர் சொன்ஞர்.

அங்கு தாதிமாருக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## முஸ்தீபு

(சென்னே)

புதுடில்லியில் அடுத்தமாதம் ஆரும் திகதி நடைபெறவுள்ள அரசு ஆலோசனேக்கூட்டம் ஒன்றில் தான் இலங்கைப் பிரச்சினேயையும் விவாதிக்க இருப்பதாக திரு. கூராஞ தெவித்துள்ளார்.

## எந்த முடிவும் இல்லே?

(டாக்கா)

பங்களாதேஷ் தலேநகரான டாக்காவில் நடைபெற்ற பாரத -பங்களாதேஷ் கூட்டு நதிக்கமிஷனின் கூட்டம் எந்த ஒரு முடிவையும் எட்ட முடியாது முடிந்தது என்று தெரிவிக்கப்படுகிறது.

எனினும் பேச்சுக்கள் புதுடில்லியில் தொடரும் என்று தெரிவிக்கப்பட்டது.

இம்மூன்று நாள் கூட்டம் செவ்வாயன்று பூர்த்தியானதும் பாரதநீர்ப்பாசனத்துறை அமைச்சர் திரு. சங்கரானந்த் இது பற்றித் தெரிவிக்கையில் ''ஓரளவு முன்னேற்றம் பேச்சுக்களில் காணப்பட்டது'' என்ருர்.

ஈழமுரசு

# ராஜீவ்: பாக்குநீரிணையில் ஆயுதக் கடத்தலை இந்தியா கண்காணிக்கும்

(கொழும்பு)

"இலங்கையில் தமிழ்த் தீவிரவாதிகளுக்கு ஆதரவளிக்கும் தென்னிந்தியாவில் உள்ள தமிழர்களிடமிருந்து நாற்பது இலட்சம் டாலர் பெறுமதியுள்ள ஆயுதங்களை இந்திய அரசாங்கம் ஏற்கனவே பறிமுதல் செய்துள்ளது என்று பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி தெரிவித்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. "பாக்கு நீரிணையில் ஏற்கனவே இந்திய அரசாங்கம் ஆயுதங்கள் கடத்தப்படுவதைக் கண்காணிப்புச் செய்து வருகிறது" என்றும் திரு. ராஜீவ் காந்தி பேட்டி ஒன்றில் கூறியதாக ஏ எப்.பி. செய்தி ஸ்தாபனம் அறிவித்துள்ளது. தனது வெளிநாட்டு விஜயத்தின் முன் அவர் இலங்கையில் ஏற்பட்டுள்ள நிலையை குறித்து குறிப்பிட்டதாகவும் இலங்கையில் தமிழ் நாடு ஒன்றுக்காகப் போராடிவரும் தமிழ்த் தீவிரவாதிகள் ஆயுதங்களைக் கடத்துவதற்குத் தமது பிரதேசத்தைப் பயன்படுத்துவதற்கு அனுமதிப்பதில்லை என்று இந்தியா தீர்மானித்துள்ளதாகவும் மேலும் கூறியுள்ளார்.

## அமைச்சர் லலித் நம்பிக்கை:

# வன்செயலை நிறுத்தி நல்ல தீர்வு காண

# இந்தியா உதவும்!

இலங்கையின் இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வே எமது வழி. அரசியல் தீர்வைக் கண்ட பின்னரே வன்செயலுக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும் என்ற கருத்தை இந்தியா முன்வைத்துள்ளது. மொத்தத்தில் அரசியல் தீர்வு காண்பதற்கு வன்செயல் நிறுத்தப்பட வேண்டுமென்பதை இந்தியா இப்போது ஏற்றுக் கொண்டுள்ளது என்று தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத் முதலி தெரிவித்துள்ளார்.

இப்பிரச்சினை சம்பந்தமான தங்கள் கருத்தைத் தெரிவிக்க பொதுமக்கள் ஒரு சந்தர்ப்பத்தைப் பெறுவார்கள் என்றும் அமைச்சர் சொன்னார்.

இந்தியப் பாதுகாப்பு அமைச்சருடன் தான் நடத்திய பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக முடிவடைந்துள்ளன என்றும் இந்திய அரசின் போக்கு நன்மையளிக்கக் கூடியது என்றும் அவர் கூறினார்.

"இந்த உச்சி மாநாட்டுப் பேச்சுவார்த்தைகள் இரு நாடுகளுக்கும் இடையிலான தற்போதைய உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கு உதவியாக அமைந்தன" என்றும் அமைச்சர் சொன்னார்.

## ராஜீவுக்கு கெய்ரோவில் மகிழ்ச்சிபூர்வ வரவேற்பு

(கெய்ரோ)

பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி இரண்டு நாட்கள் விஜயம் மேற்கொண்டு நேற்று கெய்ரோ சென்றடைந்தபோது கெய்ரோ விமானநிலையத்தில் மகிழ்ச்சிபூர்வ வரவேற்பளிக்கப்பட்டது. எகிப்திய பிரதமர் கமால் ஹசன் அலி விமான நிலையத்தில் அவரை வரவேற்றார். பிரதமர் அங்கிருந்து எகிப்திய ஜனாதிபதியின் இல்லத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

எகிப்திய ஜனாதிபதி முபாரக் அங்கு அவரை வரவேற்று தமது அமைச்சர்களை அறிமுகம் செய்து வைத்தார். இராணுவ அணிவகுப்பு மரியாதையும் இடம்பெற்றது.

பிரதமர் ராஜீவ் காந்தி மறைந்த ஜனாதிபதிகள் நாசர், அன்வர் சதாத் ஆகியோரது கல்லறைகளுக்கும் சென்று அஞ்சலி செலுத்தினார்.

நேற்று சுமார் ஒருமணி நேரம் இரு தலைவர்களும் பேச்சுவார்த்தைகள் நடாத்தியதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## அகதிகள் புனர்வாழ்வு 11-ல் கூட்டம்

அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தினால் இம்மாதம் 8ம் திகதி காலை யாழ்ப்பாணம் வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் நடத்தப்படவிருந்த கூட்டம் எதிர்வரும் பதினோராம்திகதி செவ்வாய்க்கிழமைக்கு பின்போடப்பட்டுள்ளது. சகல பிரஜைகள் குழுக்களினதும் பிரதிநிதிகள் ஒவ்வொருவர் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு அழைக்கப்பட்டுள்ளனர்.

## எண்ணெய் ரயில் யாழ். வந்தது

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் நேற்று எண்ணெய் ரயிலொன்று அனுராதபுரத்திலிருந்து யாழ்ப்பாணம் வந்தது. இதில் கொண்டுவரப்பட்ட பெற்றோலும், டீசலும் இன்றும், நாளையும் விநியோகம் செய்யப்படும்.

## மட்டுப்படுத்தப்பட்ட,,,

– 1ஆம் பக்கத் தொடர்

சேவை பஸ்களும் சேவையிலீடுபடும். முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி, மன்னார் பஸ்களும் சேவையில் ஈடுபடும். மற்றைய பாதைகளில் மட்டுப்படுத்தப்பட்ட சேவை நடைபெறும்.

## சிவகுமாரன் நினைவாக

1974ல் மரணமான சிவகுமாரனின் பதினோராவது சிரார்த்த தினத்தையொட்டி ஒட்டப்பட்ட பல்வேறு சுவரொட்டிகள் நேற்று யாழ்ப்பாணப் பகுதிகளில் காணப்பட்டன. புரட்சிகர ஈழ விடுதலை இயக்கத்தினாலும் (றெலோ) தமிழ் ஈழ மாணவர் அமைப்பினாலும் (ரெசோ) வெளியிடப்பட்ட பெரிய அளவிலான சுவரொட்டிகளும் பல இடங்களில் ஒட்டப்பட்டிருந்தன.

## நெடுந்தீவு பிரச்சினைகள் மகாநாட்டில் ஆராய்வு

நெடுந்தீவு மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு கஷ்டங்கள் பற்றியும் நேற்று அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெற்ற முக்கிய மகாநாடொன்றில் ஆராயப்பட்டது.

நெடுந்தீவுக்கான பாதைச் சேவையை நாளைமுதல் ஆரம்பிப்பதென இங்கு முடிவானது.

பாடசாலைகள், ஆஸ்பத்திரி ஆகியவைகளை அடுத்த திங்கள் முதல் இயங்கச் செய்வதெனவும் இங்கு தீர்மானிக்கப்பட்டது.

தபால் சேவை தொடர்ந்தும் மூன்று தினங்கள் நடைபெறும்.

படகு தாக்குதலில் மரணமானவர்களின் பூரண விபரங்களும் இங்கு சமர்ப்பிக்கப்பட்டது

## வேண்டுகோள்

31 - 5 - 85 வெள்ளிக்கிழமை இரவு தமிழர் நிதியம், 140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திலிருந்து 30/3926 இலக்க பச்சை வர்ண டொயோட்டா ஹை ஏஸ் வான் இனந்தெரியாத சில இளைஞர்களால் கடத்திச் செல்லப்பட்டது. அது இன்றுவரை திருப்பித் தரப்படவில்லை. இவ் வான் கடத்தல் மூலம் பொருளாதார ரீதியிலும், உடல் ரீதியிலும் எமது சக்திக்கு மீறிய நிலையில் பாதிக்கப்பட்டுள்ளோம். ஆகவே சம்பந்தப்பட்டவர்கள், தற்போது எந்த நிலையில் வான் இருந்தாலும் தயவு செய்து அதனை எம்மிடம் திருப்பித் தந்துதவுமாறும் அவசியமாயின் இது சம்பந்தமாக எம்முடன் தொடர்பு கொள்ளுமாறும் மனிதாபிமான அடிப்படையில் வேண்டிக் கொள்கிறோம்.

திருமதி அ. கமலாதேவி

## பெற்றோலும், டீச......

...1 ஆம் பக்கத் தொடர்

செல்லும் வாகனங்கள், படகுகள், மாநகர சபை வாகனங்கள் ஆகியவை அத்தியாவசிய சேவையில் அடக்கப்படுகின்றன.

இச் சேவையில் ஈடுபடுபவர்கள் கச்சேரியில் அரசாங்க அதிபரைச் சந்தித்து இதற்கான விபரங்களைக் காட்டி கொடுப்பனவுச்சீட்டு ஒன்றைப் பெற்றுக் கொண்டதன் பின்னர், யாழ் வீரசிங்கம் மண்டபத்திற்கு அருகேயுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்க பெற்றோல் நிரப்பு நிலையத்தில் எரிபொருளை பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான பணத்தைச் செலுத்தும் இடம் இன்று அறிவிக்கப்படும்.

வைத்தியர்கள், பொறியியலாளர்கள், நீதவான்கள், அரச திணைக்கள, கூட்டுத்தாபன அதிகாரிகளுக்கு இன்று இதே இடத்தில் எரிபொருள் வழங்கப்படும். ஆனால் அவர்களுக்கு இருபது லீற்றர் மட்டுமே வழங்கப்படும்.

தனிப்பட்டவர்களுக்கு நாளை ஏழாம் திகதி பெற்றோல் மட்டும் வழங்கப்படும். டீசல் வழங்கப்படமாட்டாது. இவர்களுக்கு ஆளொருவருக்கு பத்து லீற்றர் மட்டுமேவழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வாகனங்களை நேரில் கொண்டுசென்று எரிபொருளை நிரப்பவேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## மூதூரில்,,,

– 1ஆம் பக்கத் தொடர்

ந்துள்ளார்.

அனுராதபுரம் சம்பவத்தில் துரிதமாக நடவடிக்கைகள் எடுத்ததுபோல, மூதூரில் தொடர்ச்சியாக நடைபெறும் சம்பவங்களிலும் நடவடிக்கை எடுக்குமாறு தாம் கேட்டுள்ளதாக அமைச்சர் ஈழமுரசுக்குத் தெரிவித்தார்.

அகதிகள் இங்குள்ள பாடசாலைகள், ஆலயங்களில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

## மீசாலை: மின்சாரம்,,,,

பிள்ளை ஆகியோரும் மின்சாரத் தாக்குதலுக்கு உள்ளானார்கள்.

இச்சம்பவத்தில் மீசாலை தெற்கைச் சேர்ந்த சின்னையா பரமகுரு (35), அவரது மனைவி யோகம்மா பரமகுரு (30), பிள்ளை, மதிவதனு பரமகுரு (10) ஆகிய மூவரும் ஸ்தலத்திலேயே பலியானார்கள். மூதவில் மின்சாரக் கம்பியில் சிக்குண்ட பெண்மணி ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்

## பயங்கரவாத..

அவசரகால பயங்கரவாத அழிவு நடவடிக்கை தடுப்பு மசோதா என்ற பெயரில் இது தயாரிக்கப்படும். பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்குமுன்னர் மந்திரிசபை மீண்டும் இதுபற்றி ஆராயும்.

## பதவி துறக்க,,,

– 1ஆம் பக்கத் தொடர்

பதாகவே அர்த்தம் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

புதிய கொள்கையொன்றின் அடிப்படையில் திட்டங்கள் நிறைவேற்றக் கூடிய ஒரு புதிய தலைவரைத் தெரிவு செய்வது இ. தொ. கா.வுக்கு அதன் பின்னர் அத்தியாவசியமாகும் என்றும் அமைச்சர் தொண்டமான் தெரிவித்தார்.


தரமான

தங்க - வைர நகைகளை

எண்ணம் போல்

தெரிவுசெய்ய

யாழ் நகரில் சிறந்த ஸ்தாபனம்

நியூ ஆனந்தா ஜுவல்லர்ஸ்

(வின்ஸர் தியேட்டருக்கு முன்)

185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்


## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

அலோசியஸ் சத்தியகுலசிங்கம்



மலர்வு: 20-11-1977

உதிர்வு: 6-6-1984

வருடங்கள் சென்றாலும் என்றும் எங்கள் மனதை விட்டகலா, எங்கள் செல்வத்தின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

தந்தை, தாய்
சகோதரர்கள்

புதுக்குடியிருப்பு, பாஷையூர்

"ஈழமுரசு" சாயிபாபா அட்வர்டைசிங் அசோசியேற்ஸ் ஸ்தாபனத்தாரால், 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 6-6-85 வியாழக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி: 23336.